செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. | வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருகிறது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. | பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ளு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௩] யாழ்ப்பாணம்:- விரோதிகிருதுளு மார்கழி மீ உ௨ வெள்ளிக்கிழமை (17-12-1971) [இல-௩௬

# அரும்பணிகள் புரிந்த தவத்திரு ஆறுமுக நாவலர்

— ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்

## சிதம்பரத்தில் கோலாகலமாக நிகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் 92வது குருபூசை விழா

["இந்துசாதனம்" அபிமான நிருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலையையும், சென்னை நகரில் வித்தியாநுபாலன அச்சியந்திரசாலையையும் நிறுவிய யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் 92வது குருபூசைத் திருவிழா கார்த்திகைத்திங்கள் 22-ஆம் நாள் சிதம்பரத்திலுள்ள நாவலர் பெருமானின் வித்தியாசாலையில் கோலாகலமாகக் கொண்டாடப்பெற்றது.

காலையில் சேக்கிழார் திருக்கோயில் ஸ்தாபனத்தின் நற்பொறுப்பாளர் திருவாளர் தி. க. இராசேசுவரன் அவர்கள், சென்னை தமிழ்ப்பேராசிரியர் திரு. அ. கி பரந்தாமனார் எம். ஏ. அவர்கள் மாணவர் மன்றத் தலைவர் புலவர் திரு. கோ. வில்வபதி அவர்கள், மற்றும் ஆசிரியர்கள், பெருந்தொகையான மாணவர்கள் கூடி விநாயகர்பூசையுடன் வழிபாடுகள் செய்தனர். சேக்கிழார் திருக்கோயிலில் வழிபாடு முடிந்ததும், ரோஜாப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட நாவலர்பெருமானின் திருவுருவச்சிலை அவர்கள்வெளியிட்டமுதற்பதிப்பு சுவடிகளுடன் இன்னிசைகள் முழங்க வாண வெடிகள் ஒலிக்க வீதியுலாவாக பள்ளி மன்றத்திற்குக்கொண்டுவரப் பெற்றது.

சேக்கிழார் திருக்கோயில் பூசகரான திருவாளர் திருஞானசம்பந்த தேசிகர் அவர்கள் மன்றத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ள நாவலர் பெருமான் திருவுருவப்படத்துக்கும் சிலைக்கும், 'சற்குரு மணிமாலை'பாடல்ஓதப்பட்டு ஒவ்வொரு பாடல்முடிவிலும் கர்ப்பூரஆராதனைகள் செய்து எல்லோருக்கும் பிரசாதம் வழங்கினார்கள்.

ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் (சுமார் 1000 பேர்) கூடி நின்று நாவலர் பெருமானுக்கு அஞ்சலிகள் செய்தனர். எல்லோருக்கும் மலைவாழைப்பழம், பூந்தி ஆதியன வழங்கப்பட்டன. காலை 11-30 மணிக்கு ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் திருமுழுக்கும் வழிபாடும் நடைபெற்று நண்பகலில்வித்தியாசாலையில் மாகேசுவரபூசையுடன் காலை விழா முடிவுற்றது.

மாலையில் வித்தியாசாலையில் சென்னை தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு. அ. கி. பரந்தாமனார் எம். ஏ. அவர்கள் தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது.

நாவலர் பெருமான் இயற்றிய துதிப்பாடல்கள் நாவலர் பெருமான்மீது குருவணக்கப் பாடல் ஓதிய பிறகு ஸ்தாபனத்தின் நற்பொறுப்பாளர் திரு. இராசேசுவரன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள்.

தருமை ஆதீனம் 26-வது பட்டம் புதிய குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பாராட்டு விழாவிற்கு அனுப்பிய ஆசியுரை வாசிக்கப்பெற்றது.

ஆசியுரையில்,

"காலந்தோறும் சைவ சமயத்தைக் காத்துநின்ற பெருமக்கள் வரிசையில், கடந்த நூற்றுண்டில் சமயத்திற்கும், தமிழுக்கும் உறுதுணையாய் நின்று அரும்பணிகள் புரிந்தவர் தவத்திரு. ஆறுமுக நாவலர்பெருமான்" என்று சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

மேலும் உயர்திரு. நல். முருகேச முதலியார் திரு ஏ. கே செட்டியார் மற்றும் பல பிரமுகர்கள் பேராசிரியர்கள் பாராட்டுச் செய்திகள் அனுப்பியிருந்தார்கள்; அச்செய்தி

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

உ
திருச்சிற்றம்பலம்

அன்ப ராகிமற் றருந்தவ
முயல்வார்
அயனு மாலுமற்
றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வாரே
னைப்பலர்
நிற்க வீங்கெனை
யெற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு
டொக்குமென் சிந்தை
மரக்க ணேன்செவி
யிரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை
யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை
மேவிய சிவனே.

திருச்சிற்றம்பலம்
— மாணிக்கவாசகசுவாமிகள்

## நாவலர் இல்லம் கலைக் கூடமாகும்

வண்ணார்பண்ணையில் நாவலர்பெருமான் வசித்த இல்லத்தை அரசாங்கம் விலைக்குப் பெற்று அதில் ஒரு கலைக்கூடம் அமைக்கக்கூடுமென்ற நற்செய்தியை அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம். ——

பல்கலைக் கழகக்

## குறிஞ்சிக்குமரன் கோவில்

ஷை கோவில் பரிபாலன சபைக் கூட்டம் 1-12-71 முற்பகல் 10-30 மணிக்கு இந்து மாணவர் மன்றத்தலைவர் பேராசிரியர் திரு பே கனகசபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தலைவரும் ஷை சபையில் ஓர் அங்கத்தவராகவுள்ளமையினுல் திரு த. சோமசுந்தரம் அவர்களும் கூட்டத்திற் சமூகமளித்தனர். உத்தியோகத்தர்கள் தெரிவு: தலைவர் பேராசிரியர் கலாநிதி சு வித்தியானந்தன், செயலாளர் வைத்திய கலாநிதி ஆர். நரேந்திரன், நிருவாக சபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் சி. முருகவேள், சி. தில்லநாதன், கலாநிதி சி. பத்மநாதன். வங்கிக் கணக்கு கோவில் நில உரிமை, கோவில் நிருவாகம் பூசைகள் சம்பந்தமான தீர்மானங்களும் நிறைவெய்தியன.

உ

## திருவெம்பாவைப் பூசையும் திருவாதவூரடிகள் புராண படனமும்

திருவருளை முன்னிட்டு வழமைபோல யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 23—12—71 வியாழக்கிழமை தொடக்கம் திருவெம்பாவை பூசையும் திருவாதவூரடிகள் புராண படனமும் நடைபெறும்.

திருவெம்பாவைப் பூசை — காலை 8 மணி
திருவாதவூரடிகள் புராண படனம் — மாலை 5 மணி

சைவாபிமானிகள் சமூகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம். 15-12-71

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

# மொழிக்குமொழிதித்திக்கும் மூவர் தமிழ்

[செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B. O. L., Dip. in. Ed கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் திருமுறை மகாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரை]

(முன் வளர்ச்சி — 2)

**மூவர் தமிழ்**

இத்திருமுறைகள் பன்னிரண்டும் இன்னின்ன என்பது இத்திருமுறை மாநாட்டிற் குழுமியுள்ள சைவப் பெருமக்களாகிய உங்கட்கு நன்கு தெரியும். இவற்றுள் ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்த முதல் மூன்று திருமுறைகளும், ஆளுடைய அரசு அருளிச் செய்த அடுத்த மூன்று திருமுறைகளும், ஆளுடைய நம்பிகள் அருளிச் செய்த ஏழாவது திருமுறையும பொதுவாகத் தேவாரங்கள் என்று அழைக்கப்படும். தேவ + ஆரம். தேவாரம் ஆயிற்று என்றனர் ஒரு சாரார். தே + வாரம், தேவாரம் ஆயிற்று என்றனர் மற்றொரு சாரார். தே என்பது தெய்வம். அஃதாவது தெய்வத்தின் மீது பாடப்பெற்ற வாரம் (அன்புப் பாடல்கள்) என்றனர் அவர். 'வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்" என வரும் சிந்தாமணிப் பாடற்பகுதி போன்ற இடங்களில் வாரம் அன்பு என்னும் பொருளில் வருதலைக் காண்கின்றோம். இல்லை, தெய்வததின் மீது பாடப்பெற்ற வாரம் (இசைப் பாடல்கள்) என்றனர் பிறிதொரு சாரார். "தோரரமகளிர் வாரம் பாடலும்" என வரும் சிலப்பதிகார அடியில் வாரம் இசைப் பாடல்கள் என்னும் பொருளில் வருதலைக் காண்கின்றோம். இவ்வாறெல்லாம் பொருள் விரிக்க நின்ற தேவாரங்களை "மூவர் தமிழ்" என்று வழங்கினர் பெரியோர்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும்" என்று தேவாரங்களை "மூவர் தமிழ்' என்று கூறுகின்றார் ஔவையார்.

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்

**நாவலர் நல்வாக்கு**

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருதுஞு மார்கழி மீ உ-வ வெள்ளிக்கிழமை [1971]

## யாழ்ப்பாணக் கல்வி நிலை

இவ்வளவு காலமும் யாழ்ப்பாணத்தின் கல்வித் தராதரத்தைக் கண்ணுற்ற சகலரும் பெரிதும் மெச்சினர். கல்வி அதிகாரிகளுக்கு இது ஒரு பிரச்சினையாக விருந்தது. இந் நிலைமை மாறி வருகின்றதுபோல சென்ற வருடவடமாகாண க. பொ. த. [சாதாரண] பரீட்சைப் பேறுகளிலிருந்து அறியக் கிடக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இவ் வருடப் பரீட்சைப் பேறுகள் திருப்திகரமாக வில்லை. 13·15 சத வீதமான மாணவர்களே க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றுள்ளனர், மிக உயர்ந்த கல்வி நிலையங்களில் இரண்டில் மாத்திரம் 60 சத வீதம் சித்தி கிடைத்திருக்கின்றது. மூன்று கல்லூரிகளில் 25 க்கும் 29 க்கும் இடைப்பட்ட சத வீத சித்தியும் மற்றையவற்றில் 25 சத வீதத்துக்குக் கீழுள்ள சித்தி கிடைத்திருக்கின்றது.

இப் பரீட்சைச் சித்தியின் வீழ்ச்சிக்கு உரிய காரணங்களை ஆராய்தல் மிக அவசியமாகும்.

1. சில பாடசாலைகளில் தேவையான வசதிகளின்மை.
2. ஆசிரியர்கள் மாற்றப்படும்பொழுது வெற்றிடங்கள் நிரப்பப்படாமை.
3. ஆசிரியர்களுட் சிலரின் அலட்சியம்.
4. கல்வி கற்பிக்கும் முறைகளில் புனருத்தாரணம் செய்யாமை.
5. முதல்வர்களை நியமிப்பதிலும் மாற்றஞ் செய்தலிலும் ஏற்படும் ஒழுங்கீனங்கள்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் கல்வி முறையினால் மாணவர்கள் கவலையும் விரக்தி மனப்பான்மையும் அடையக் கூடியதாயிருக்கின்றது. பெற்றோர்கள் மனம் சஞ்சலமடைய இவை வழியாக உள்ளன.

இவ்வாறிருக்க, பாடசாலைகளில் இனி, ஆரம்பக்கல்வி அநுமதி வயது ஆறு என்ற திட்டமும் பெற்றோர்களை மிகவும் பீதியடையச் செய்துள்ளது. இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என அறிஞர்கள் பலர் வற்புறுத்துகின்றனர்.

இந் நிலைமைகளை திருத்தஞ் செய்யக்கூடிய வழி வகைகளைக் கல்வி யதிகாரிகள் கையாளுவார்களாக.

## நாவல் நகரில் நாவலர் குருபூசைவிழா

### நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கிளை அமைக்க விண்ணப்பம்

[நாவல் நகர் இந்துவாலிபர் சங்கத்தின் ஆதரவில் நாவல்நகர் கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற நாவலர் பெருமான் குருபூசை விழாவில் மேற்படி சங்கத்தலைவர் திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்கள் நிகழ்த்திய தலைமையுரையின் ஒருபகுதி]

மெய்யன்பர்களே,

நாவல்நகர் இந்து வாலிபர் சங்கம் 52 ஆவது வருடத்திலே நாவலர் பெருமானின் 92ஆம் குருபூசைவிழாவைக் கொண்டாடுகின்றது. இத் தினம் லண்டன் மாகாலே, மலேஷியாவிலே, சிதம்பரத்திலே, ஈழத்தில் பற்பல விடங்களிலும் கொண்டாடப்படுகின்றது.

நாவலர்பெருமான்தோன்றி 149 வருடங்கள் ஆகின்றன. அவர் மறைந்து 92 வருடங்கள் ஆகின்றன. ஆனால் இன்றும் நாங்கள் நாவலர்பெருமானை நினைவுகொள்கிறோம். விழாஎடுக்கிறோம். சிலைஎடுத்தோம். எதற்காக? சமயகுரவர் நால்வருக்குப் பின் ஐந்தாம் குரவராக ஈழத்திலும், தமிழகத்திலும் தமிழ் வாழச் சைவம் வாழ அவதரித்தவர். நாவலர்பெருமான் பிறந்திலரேல் நாங்கள் இன்று சைவர்களாக இருந்திருப்போமா வென்பது ஐயத்திற்கிடமானது.

ஓரஞ்சிதைந்தும், புழுஉழுதும் பழுதடைந்து இதழொடிந்தும் கிடந்த பல ஏட்டு நூல்களைத் தேடி எடுத்துப் பரிசோதித்து முதன் முதல் அச்சுவாகனம்ஏற்றி எல்லோருக்குங்கிடைக்கும்படிசெய்த பெருமை நாவலர் பெருமானுக்கே உண்டு.

உலகம் போற்றும் தமிழ் மறையாம்திருக்குறளை முதன் முதல் பதிப்பித்த பெருமையும் நாவலருக்கே உண்டு. நாவலர்பெருமானுக்கு இசை ஞானமும் இருந்திருக்கின்றது அவர் பாடிய கீர்த்தனங்கள் இதற்குப் போதிய சான்று. இந்த இசை ஞானமே அவருடைய பிரசங்கங்களைப் பிரகாசிக்கச்செய்ததுஎன்றால் மிகையாகாது.

நாவலர் பெருமானுக்குச் செய்யுள் ஆக்கும் திறன் இருந்தும் வசன நடையிலே பல நூல்களை எல்லோர்க்கும் பயன் அடையும் வண்ணம் எழுதி வெளியிட்டார். வசன நடை என்றால் இது என்று எழுதிக் காட்டியவர் அவர். இதனால்அன்றோ வசனநடை கை வந்த வள்ளலார் என்று போற்றிப்போந்தனர் சூரிய நாராயண சாஸ்திரி அவர்கள்

மேற்படி விழாவில் பௌத்த குருவும் கிறிஸ்தவ மத குருவும பிறமதப் பெரியோர்களும கலந்து கொண்டமையைத் தலைவர் பாராட்டினார். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளுடைய கதாப்பிரசங்கமும் இடம் பெற்றன. கீழ மாகாணத்தில் நல்லை. ஞானசம்பந்தராதீனத்திற்கொரு கிளை ஆரம்பித்தமைபோல நாவல் நகரிலும் ஒரு கிளையை ஆரம்பிக்கும்வண்ணம் தம்பிரான் சுவாமிகளுக்கொரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பெற்றது.

## மொழிக்குமொழித்திக்கும்

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

தாயுமான அடிகள் தமது பாடலின் சிறுமையையும் தேவாரகாரர் பாடிய பாடல்களின் பெருமையையும் நினைந்து பார்க்கிறார். தேவாரப் பாடல்களைக் கேட்கும் இறைவன் திருச்செவிகளுக்குத் தாம் புலம்பிய சொல் ஏறுமோ என்று எண்ணுகின்றார். "மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர் சொலுந் தமிழ்" என்று தேவாரங்களைப் போற்றுகின்றார்.

"தேவரோலாந் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே மொழிக்கு மொழி தித்திப்பாக
மூவர் சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கு
மூடனேன் புலம்பியசொல் முற்றுமோதான்"

என்று தேவாரங்களின் பெருமை தெரிந்து அவர் உருகிப் பாடுதல் காண்க. அருட் செல்வராகிய தாயுமான அடிகளே இவ்வாறு போற்றுவராயின், தேவாரங்களின் பெருமையை யாம் எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ?

### திருவாசகமுந் திருக்கோவையாரும்

திருவாசகம் திருக்கோவையார் இரண்டும் எட்டாந் திருமுறையாகும். திருவாசகம் மணிவாசகர் தந்த இனிய தேன். உயிர்ப்பினி நீங்கும் உயரிய தேன். அவர் வார்த்தை மணி வார்த்தை. இறைவனே அமுதமுகு பாடிய அவருடைய பாடலிலேயே இந்த மணி வார்த்தை என்னுஞ் சொல் வருதலைக் காண்கின்றோம்.

'சிந்தனை நின்றனக் காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி'

என்கின்றார் அவர்.

'திருவாசகத்திற் கிரங்கார் ஒரு வாசகத்துக்கும் இரங்கார்' என்பது பழமொழி. திருவைந்தெழுத்து, கடவுளிலக்கணம், பாசம், ஆகமங்கள், பிறவிகள், சமயம், சிவானந்தாநுபவம் என்றிவ்வாறு எத்தனையோ அரும்பொருள்கள் பற்றி அது பேசுகின்றது. மணிவாசகப் பெருமானை 'அழுதடியடைந்த அன்பர்' என்பர். திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர். திருவாசகத்தைப் போற்றவந்த துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாசகத்தை வேதத்திலும் ஒரு படி உயர்த்திப் பேசுவாராயினர். வேதம் ஓதும்போது கண்ணீர் பெருக்கி உருகுவோரைக் காண்கிலோம். ஆயின்,

"திருவாசகமிங் கொருகா லோதிற்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே"

என்றார் அவர்.

தண்டாமரையினுடன் பிறந்தும் தண்தேன் நுகரா மண்டூகங்கள் போல யாமிருப்ப, எங்கேயோ இருந்துவந்த வண்டுபோன்ற வேற்றுச் சமயத்தவராகிய டாக்டர் ஜி யூ. போப் (Dr. G U. Pope) அதனைப் படித்துச் சுவைத்துத் தம் மொழியிற் பெயர்த்துத் தமிழ்மொழியிலும் அத் திருமுறையிலும் திளைக்கலானார்.

இராமலிங்க அடிகள் திருவாசகத்தைப் பாராட்டுவதை யாரே அறியார்?

வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாம லினிப்பதுவே"

என்று அவர் போற்றுஞ் சிறப்புக் காண்க. திருவாசகத்தின் பெருமையை யாம் வேறு இங்கு விவரிக்க வேண்டுமா?

'அறிவனூற் பொருளும் உலகநூல் வழக்குமென
இருபொருளும் நுதலி எடுத்துக் கொண்டனர்'

மணிவாசகர் திருக்கோவையில் என்று போற்றப்படுகின்றது. இதிலிருந்து திருக்கோவையாரின் பெருமையை யாம் காண்கின்றோம். (வளரும்)

## பிள்ளைகளைச் சேர்த்தல்

அகில இலங்கை வேதாகம சைவ சித்தாந்த சபை 14-12-71 இல் கல்வி மந்திரிக்கு பாடசாலைகளில் பிள்ளைகளைப் புதிதாகச் சேர்க்கும்பொழுது பழைமை போல 5 வயதாக இருக்க வேண்டுமென்றுகோரித் தந்தி கொடுத்திருக்கிறார்கள். எதிர் வரும் 1-ஆம் தேதி நிர்வாக சபை கூடி மகஜர் தயாரித்து அச் சபையின் அங்கீகாரத்துடன் அனுப்புவார்கள்.

## காரை. திரு. அருணசல உபாத்தியாயர் வரலாற்று நூல்வெளியீட்டு விழா

காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் திரு. அ. சந்திரசேகரம் B. A. அவர்கள் தலைமையில், காரை திரு. அருணாசல உபாத்தியாயர் வரலாற்று நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. திரு. ச. சபாபதி அவர்கள் வரவேற்புரையும், திரு. அ. வி. மயில்வாகனம்அவர்கள் நூல்நயவுரையும் வழங்கிய பின் சைவப் புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை, திரு ஆ. தியாகராசா (பா. உ.) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. சி. சதாசிவம்பிள்ளை ஆகியவர்கள் பாராட்டுரை வழங்கினார்கள். சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது சொற்பொழிவும் நிகழ்ந்தது.

## இலவச வெளியீடு

எதிர் வரும் திருவெம்பாவைப் பூசைக் காலத்தை முன்னிட்டு திருவாதவூரர் திருவாய்மலர்ந்தருளிய திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி என்னும் நூல் யாழ்ப்பாணம் மில்க்வைற்சோப் தொழிற்சாலை அதிபரால் இலவசமாக வழங்கப்படுகின்றது. நயப்பாக்கம் க. சோமசுந்தரம்செட்டியார் அவர்களது முகவுரையும் மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறும் நூலின் முற் பகுதியில் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

## திருவெம்பாவை வழிபாடு

யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் திருவெம்பாவைக் காலத்தில் (23-ட முதல் 1-1-72 வரை) அதிகாலை 4 மணி முதல் திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி பஜனையை நாயன்மார்கட்டில் நடத்துவர்,

x x x

வண்-மேற்கு அரசடி விநாயகர் ஆலய பஜனைக் கோஷ்டியினர் திருவெம்பாவைக் காலங்களில் அதிகாலை 4 மணிக்கு ஷெ ஆலயச் சுற்றுடல்களில் பஜனை நடாத்தவிருக்கின்றனர்.

## சிங்கப்பூர் சிலோன் ரோட் ஸ்ரீ செண்பக விநாயகர் கோவில்

மேற்படி கோவிலில் திருக்கார்த்திகைத் தீபவிழா 2-12-71 வியாழக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேகமும், பூசைகளும் நிகழ்ந்த பின் சர்வாலய தீபம் ஏற்றப் பட்டன. ஈழத்திலிருந்து வந்துள்ள நாதஸ்வர வித்துவான் திரு. P. S. ஆறுமுகம்பிள்ளை குழுவினர் இன்னிசை விருந்தளித்தனர். (ந. நி.)

## அருள் வாக்கு

தருமையாதீனத்தின் முதல்வரும், 25ஆவது குருமகா சன்னிதானமாக விளங்கியவருமாகிய கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமண்யதேசிக ஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள் வழங்கிய அருளுரைகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பகுதி 17, 18, 19-12-71 ஆம் திகதிகளில் சைவ நற்சிந்தனை நிகழ்ச்சியில் ஒலிபரப்ப ஒழுங்குகள் செய்துள்ளது' ந. நி.

ஊர்வலத்துடன்நாவலர்விழா சிறப்பாக நடைபெற்றது. பல அறிஞர்கள் உரைநிகழ்த்தினர். இரா. தங்கவேல் நன்றியுரை நவின்றார்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வழ. இல. M. B. 7375

சோனகதெரு யாழ்ப்பாணம் 1. ஆறுமுகம் மாணிக்கம்
2. பெண் யெகசோதி —வழக்காளிகள்

எதிராக

அரசடி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் 1. வயித்திலிங்கம் நடராசா 2. நடராசா சறீஸ்கந்தராசா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7375-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆறு துண்டுக் காணிகளை 1971-ம் ஆண்டு மார்கழி மாதம் 27-ம் திகதி (27—12—71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 7008-52 ம் 26-4-65 தொடககம் 30-1-68 வரைக்கும் ரூபா 4300/-க்கு 5 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 493-40. இதில் ரூபா 3000/- கொடுபட்டுள்ளது.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை வடகிழககுஇறை "ஆவரம்துலகை வண்ணுன் தோட்டம், கட்டலம் புலம்" கிலப் பரப்பு பத்து 10 உறுதிப்படி ஆனல் உத்தரவு பெற்ற உலாந்தா எஸ் ஏகாம்பரம் 18-8-58 இல் தயாரித்த 410 A படம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் P 213 வழக்கில் அணைத்தபடி கில. பர. 10 குளி 16, 4/10 இதில் பிரிக்கப்பட்டு இப் படத்தில் 2 A என்னும் துண்டாகக் காட்டப்பட்ட குளி 15, 8/10 இதற்கு எல்லை கிழக்கு 2 F துண்டு வடக்கு 2 B, 2 C துண்டுகள் மேற்கு துண்டு 1 தெற்கு நடராசா பெண் சின்னத்தங்கச்சிக்குரிய பங்காளருக்குரிய காணிகள், பதிவிலக்கம் D 266/90.

(2) ஷெ 'ஆவரந்தலை, வண்ணுன் தோட்டம் 'கட்டலம் புலம்' கில பர 10 குளி 16, 4/10 இதில் பிரிக்கப்பட்ட குளி 4 குறித்த படத்தில் 2 ந் துண்டு (இது 2 A துண்டுக்குப் போகுவரவு 6 அடி அகலம்) இதில் இருப்பவைகளும் துண்டுகள் 2 F, 2 C ஊடாக வழி வாய்க்கால் உரித்தும் துண்டு 2 D ல் இருக்கும் கிணற்றிலும் துரவையிலும் பாவிப்புரித்தும் இந்தக் குளி 4 ம் எல்லை கிழக்கு துண்டு 2 C வடக்கு ரேட்டு மேற்கு துண்டு 1 தெற்கு துண்டு 2 A பதிவு இலக்கம் D 266/91.

(3) ஷெ 'ஆவரந்தலை வண்ணுன் தோட்டம்', கில பர 10 குளி 16, 4/10 குறித்த படத்தில் பிரிக்கப்பட்ட துண்டு 2 E குளி 12, 6/10 ம் இதைச் சேர்ந்தவைகளும் 2 D துண்டிலிருக்கும் கிணற்றிலும் துரவையிலும் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு துண்டுகள் 3 B, 3 C வடக்கு துண்டு 2 F மேற்கு துண்டு 2 D தெற்கு நடராசா பெண் சின்னத்தங்கச்சிக்குரிய ஆதனம். பதிவிலக்கம் D 266,93.

(4) ஷெ 'ஆவரந்தலை வண்ணுன்தோட்டம் கட்டலம்புலம்' கில பர 10 குளி 16, 4/10 இதில் ஷெ படத்தில் பிரிக்கப்பட்ட துண்டு 2 F குளி 3/10 ம் இதைச் சேர்ந்தவைகளும் இந்தக் குளி 3/10 ம் எல்லை கிழக்கு துண்டு 3 C. வடக்கு துண்டு 2 C மேற்கு துண்டு 2 A தெற்கு துண்டு 2 E. பதிவு இல D 266/93.

(5) ஷெ 'ஆவரந்தலை, வண்ணுன் தோட்டம், கட்டலம் புலம் கில பர 10 குளி 16, 4/10 இதில் ஷெ படத்தின்படி பிரிக்கப்பட்ட துண்டு 3 F குளி 16, 7/10 இந்தக் குளி 16, 7/10 க்கும் எல்லை கிழக்கு வாய்க்கால், வடக்கு துண்டுகள் 3 A. 3 C மேற்கு துண்டு 3 F தெற்கு நடராசா பெண் சின்னத்தங்கச்சிக்குரிய ஆதனம். பதிவு இலக்கம் D 266/94.

(6) ஷெ 'ஆவரந்தலை, வண்ணுன் தோட்டம் கட்டலம் புலம்' கில பர 10 குளி 16, 4/10 இதில் பிரிக்கப்பட்ட துண்டு 3 C குளி 16, 2/10 — 9 அடி அகலம் பாதை எல்லை கிழக்கு துண்டு 3 A வடக்கு ரேட்டு, மேற்கு குறித்த படத்தில் துண்டுகள் 2 C, 2 D, 2 E, 2 F, தெற்கு குறித்த படத்தில் துண்டு 3 B இடைக்கவிற் சொரியலாய் அரைவாசி. துண்டு 2 D இதற்கும் 1ம் ஈடு வைத்தவருக்கும் போக்கு வரவு செய்யும் பாவிப்புரித்துப் புறநீங்கலாக, பதிவு இலக்கம் D 266/95.

46, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
இ. சு. தர்மரத்தினம்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
எம. 344 17—12—71

## COMMISSION SALE

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல, 10899

1. கனகரெத்தினம் விசுவநாதன் 2. பெண் ருக்குமணிதேவி புலோலி மேற்கு, தற்சமயம் கொழும்பில் —வழக்காளிகள்

எதிராக

1. இராமு சதாசிவம், கூடுப்பிட்டி வடக்கு, —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டாலெனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியுமிதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்குமாதனங்களை 1972ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ந் திகதி (24-1-72) திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கூடுப்பிட்டிக் கோவிற்பற்று கூடுப்பிட்டிக் குறிச்சியிறை "சோந்தகலை" வீடு 1 ஷெ 4 தோட்டம் ஷெ நி. பா. 50¾ சோந்தலை மேற்குக்கலட்டி நி. பா. 5½ இவைகளில் திந்தமான நி. பா. (8½) எட்டரையில் கிழக்குப் புறமாக நி. பா. ஒன்று நீக்கி மிகுதிக்கு நி. பா. 7½ இது கூல்ந்தா மேனைர் க. க. கணபதிப் பிள்ளை அவர்களால் 1937ம் ஹூ பங்குனி மீ 17 ஆம் திகதி 6175ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நி. பா. 7 குளி 9, 16/32 குறித்த படத்தில் 1ம் துண்டுக்கு நி. பா. 3 குளி 7, 2/32 இதற்கெல்லை கிழக்கு இத்துண்டுக்கும் 2ம் துண்டுக்கும் பொதுவாகவிடப்பட்ட 4ம் இலக்க ஒழுங்கை நிலத்துண்டு வடக்கு எனக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு நடராசா கைம்பெண் பூரணத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு இராசதுரை பெண் கனகம்மையின் 2ம் துண்டு நிலம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், தென்னைகள், வடலிகள் வேம்புகள் அடங்கலும் இன்னும் முழுக்காணிக்குத் தென மேற்குப் புறமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் 2ம் துண்டுக் கூடாக A. B. C. D. என்னும் அட்சரங்களால் குறிக்கப்பட்டு இத்துண்டுக்குத் தண்ணீர் பாய்ச்சும் வாய்க்காலுரித்தும் இன்னும் முழுக்காணிக்குத் தெற்குப் புறமாகவிருக்கும்; கிணற்றிலிருந்து 5ம் இலக்கத் துண்டுக்கூடாகவும் 2ம் இலக்கத் துண்டுக்கூடாகவும் இத்துண்டுக்குத் தண்ணீர்போகும் வாய்க்காலுரித்தும். (மதிப்பிட்ட விலை ரூபாய் 6,780/-)

2. ஷெ இறை 'சோந்தம்லை' வீடு 1 ஷெ தோட்டம் 4, ஷெ நி. பா. 50¾ 'சோந்தம்லைப் மேற்குக் கலட்டி' நி பா. 5½ இவைகளில் திந்தமான நி. பா. 9 குளி 3/8 இதில் தெற்கரைவாசிக்கு நி பா. 4 குளி 9, 3/16 இதற்கெல்லை கிழக்கு ஐயாசாமி இராசமாணிக்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு எனககுரிய ஆதனம், மேற்கு முருகுப்பிள்ளை வயிரமுத்துவுக்கும் பெண் கனகம்மாளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு சரவணமுத்து வுப்பாத்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கிணற்றடியிலிருக்கும் ஆறு தென்னைகள். கிழக்கேயிருக்கும் தென்னைகள், வடலிகள் அதடங்கலும் இதற்குள் இருக்கும் கிணற்றிலும் தெற்கேயிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

(மதிப்பிட்ட விலை ரூபாய் 9,000/-)

| | |
|---|---|
| தீர்வைத்தொகை; முதலும் வட்டியும் | ரூபா 5740 00 |
| வட்டி ரூபா 4000/-க்கு 9 வீதப்படி 3—5—70 தொடக்கம் 19—8—70 வரை | 105 00 |
| வட்டி ரூபா 5845/-க்கு 5 வீதப்படி 19—8—70 தொடக்கம் 19—11—71 வரை | 365 00 |
| வட்டி ரூபா 5845/-க்கு 5 வீதப்படி 19—11—71 தொடக்கம் 24—1—72 விற்பனவு வரை | 48 70 |
| மொத்த ரூபா | 6258 70 |

சிவலிங்கநிலையம், வி. மூ. ரேட், பருத்தித்துறை 14-12-71.
க. நல்லலிங்கம்
கோட்டுக் கொமிஷனர்
ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்.
எம். 350 17—12—71

## வில்லூன்றி விநாயகர் தேவஸ்தானம்

(23—12—71) முதல் 17ம் திகதி (1—1—72) வரை திருவெம்பாவைபூசையும், திருவாதவூரடிகள்புராண படனமும் (23-12-71) வியாழக்கிழமை மாலை விநாயகசஷ்டி உற்சவமும் வழமைபோல் நடைபெறும் மாலை 4 மணி பெருங்கதைப் படிப்பு, 7 மணி திருவிழாவும். 3—12—71 முதல் நடைபெற்றுவரும் இலட்சார்ச்சனை 24—12—71 வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு பூர்த்தியடையும். மாலை 5 மணி பஞ்சமுக விநாயகர் பெருமானுக்கு விசேஷ பூசையும் பஞ்சமுகார்ச்சனையும், 6-30மணி திருவுலாவும் 23, 24-12-71 மாலை 7-45 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்கள்.

### சைவசமய பாட போதனை

அராலி தெற்கு சைவ சமய விருத்திச் சங்கமொன்று 21-11-71 அன்று ஆரம்பிக்கப் பெற்றது. தலைவர் திரு. வி. நாகலிங்கம், காரியதரிசி மூ. கணபதிப்பிள்ளை, தனதிகாரி இ. கந்தமுத்து நிர்வாக சபையினர் நால்வரும் தெரிவு செய்யப் பெற்றனர் அராலி தெற்கு சனசமூக நிலையக் கட்டிடத்தில் ஷெ சங்க ஆதரவில் திருவாதவூரடிகள் புராண படன வகுப்பு ஒன்று செவ்வாய்க்கிழமைதோறும் மாலை 7 மணி தொடக்கம் இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. வி. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றுவருகின்றது.

### நவரத்தினத்தின் நூல் நிலையம் ஒருவிளக்கம்

3-12-71ல் கலைப்புலவர் நவரத்தினத்தின் நூல் நிலையம் என்னும் மகுடத்தில் வரையப்பட்ட கருத்துக்களுக்கு ஒரு விளக்கம் தெரிவிக்க வேண்டியிருக்கின்றது. சங்கம் விலைக்குப் பெற்றுள்ள நூல்கள் கலா நிலையத்தின் நூல்கள் உட்படவுள்ளதெனக் கருத அக்கட்டுரையில் இடமுண்டு. அதனையிட்டு மனம் வருந்துகின்றோம். குறிப்பிட்ட சங்கம் விலைக்குப் பெற்றுள்ள நூல்கள் கலைப்புலவருடைய சொந்த நூல்நிலையத்தைச்சேர்ந்தவைகளே. —ப.ர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

அனுராதபுரம் 9, குட்ஸ்செட் ரேட்.
1. நமசிவாயம் கார்த்திகேசுவும் மனைவி
2. இராசம்மாவும், —வழக்காளிகள்

வழ. இல: M B 7837 எதிராக

யாழ்ப்பாணம். அத்தியடி. 22, புது ரேட், நடராசா மகாதேவன் —எதிராளி

M B / 7837-ஆம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனங்கள் 1972-ம் ஹூ ஜனவரி (தை) மாதம் 18-உ (18-1-72) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் வரிசைக்கிரமப்படி அவ்வவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1845/- மேலும் 1500/- ரூபாவுக்கு 25—11—65 தொடக்கம் 4—7—68 வரைக்கும் வருடமொன்றுக்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 337-99 சதம் பவுண்டேச மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "சித்திருன்வதை" நிலப்பரப்பு 12 இதற்கு எல்லை கிழக்கு பாலர் ஆறுமுகத்துக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு கந்தையா மனைவி அன்னப்பிள்ளைக்கும், பங்காளர்களுக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு சங்கரப்பிள்ளை மனைவி முத்துப்பிள்ளைக்கும பங்காளர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு ஆறுமுகம் அம்பலவாணருக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், இது முழுவதிலும் சொரியலாய் (1/16) பதினறிலொரு பங்குடன் அதைச் சேர்ந்தவைகளும். உரிமைகளும். பதிவு D. 174/78

2. மேற்படி கோண்டாவில் இறை 'குமிலடி' நிலப்பரப்பு 3½ இதற்கு எல்லை கிழக்கு மருதன் மனைவி பூபதிக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு வேலாயுதர் பொன்னையாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு கார்த்திகேசு நன்னித்தம்பிக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம் இது முழுவதிலும் சொரியலாய் (1/16) பதினறிலொரு பங்குடன் அதைச் சேர்ந்தவைகளும், சகல உரிமைகளும்.

பதிவு D. 174/80

"இராச கிரி" 643, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 22-11-71
வி. செ, குட்டிப்பிள்ளை, கொமிஷனர், Auctioneer Sales & Valuer
எம் 338-71

### தெல்லிப்பழையில் நிகழ்ந்த ஞாபகார்த்தக் கூட்டத்தில் பாராட்டுரை

பாலர் ஞானோதய சபையின் ஸ்தாபகரும் தலைவருமாக விளங்கிய பிரம்மஸ்ரீ. மூ. சிவகடாக்ஷக் குருக்களின் ஞாபகார்த்தக் கூட்டம் 3-12-71 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் காசிவிநாயகர் ஆலயத்தில் திரு. T. சுந்தரமூர்த்தி இளைப்பாறிய ஆசிரியர்) தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

இச்சபையின் நடைமுறைகளைப் பற்றி நீண்ட காலமாக எனக்குத் தெரியும். சபையின் வளர்ச்சிக்கு முன்னின்றுஉழைத்தவர் மறைந்த பெரியாரே என்று கூறின் மிகையாகாது. அன்னரின் பிற்கால வாழ்க்கை சிவதொண்டிலேயே கழிந்தது, அவருடைய சிவப்பொலிவு விநாயகப் பெருமானைப் போன்றே விளங்கியது. அவர் வருகிருர் என்றுல் விநாயகர் வருவது போன்றே இருக்கும். திரு ந. செல்வநாயகம் அவர்களும் குறிப்புரை கூறினுர்.

### அரும்பணிகள் புரிந்த

(1-ம் பக்கத்தின் வளர்ச்சி)

களும் வாசிக்கப்பட்டன.

விழாவிற்கு தலைமை தாங்கிய தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. அ. கி. பரந்தாமனுர் M. A. அவர்கள் தலைமையுரை கூறுகையில் இன்று பூராவும் (காலைமுதல் மாலைவரை) இப்பள்ளியின் இளம் மாணவர்களின் நிகழ்ச்சிகள் வெகுசிறப்பாக இருந்து என்னுடைய உள்ளத்தை கவர்நதது. நான் கிறிஸ்துவப் பள்ளியில் 23½ ஆண்டுகள் பணியாற்றினேன். என்னுடைய அனுபவத்தில் பெரியவர்களை பின்பற்றுவதில் இனி பயன் இல்லை, இளம் உள்ளங்களை கைப்பற்றினுல்தான் உலகம் முன்னேற முடியுமென்றும், இளம் உள்ளங்கள் தான் எதிர்கால செல்வங்கள் என்றும் கூறினுர்.

மேலும், பேராசிரியர் உயர்திரு. பரந்தாமனுர் M.A. அவர்கள் பேசுகையில், நாவலர்பெருமான் வரலாற்று

வளர்ச்சி 4-ம் பக்கம்

### நாவலரைக்கெளரவிக்கும்செயல்



பக்தர்: "நாவலர்குடியிருந்தவீடு அரசாங்கத்தால் விலைக்குப் பெறப்பட்டு உரிய மரியாதைகளுடன் விளங்க வைக்கப் போருங்களாம்! எங்கும் இப்ப இந்தப் பேச்சுத்தான்!"

சித்தர்: "நாம் பெரும் பாக்கியசாலிகள் என்று இந்தச் செய்தியைக் கேட்கும் ஒவ்வொரு தமிழனும் — சைவனும் பெருமைகொள்ளலாம்! அந்த உத்தமர் நினைவாக இப் பணியைச் செய்வது மக்களுக்கும் — அரசுக்கும் மிகப்பெரும் கெளரவம் என்று சொல்லவா வேண்டும்! இது நடக்குமோ? என்றகவலை யாருக்குமே வேண்டாம்; தேசிய வீரர்களைக் கெளரவிப்பதில் இந்தஅரசுக்கு இணை ஏது என்றது மக்கள் தீர்ப்பாச்சுதே!

"நாயன்மார் - நாதன்"

## அரும்பணிகள் புரிந்த

[3-ஆம் பக்கத்து வளர்ச்சி]

நாடகம் மனதைக் கவர்ந்தது, பள்ளியின் தலைமையாசிரியர் உயர்திரு. சுவாமிநாதன் அவர்கள் தொகுத்துள்ள நாடகமாகும். இப்பள்ளிக்கு நல்ல ஆசிரியரை பிடித்துள்ளார்கள். அபிநய நாட்டியம் ஆடிய குழந்தை (தலைமை ஆசிரியரின் மகள் பத்மினி) மிகமிக நன்கு ஆடியது என்றும் பாராட்டுதல் தெரிவித்துக் கொண்டார்.

பேராசிரியர் உயர்திரு. பரந்தாமனூர் M. A. அவர்கள் தொடர்ந்து பேசுகையில் தாய்மார்கள் பெண் பிள்ளைகளை 11 வது வகுப்பு வரையிலாவதுபடிக்கவைக்க வேண்டும் இடையில் திருமணம் பற்றியே பேசவே கூடாது. இதுவே நாட்டுக்கு பெண்கள் செய்யக் கூடிய பெருந் தொண்டாகும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பேராசிரியர் உயர்திரு பரந்தாமனூர் M. A. அவர்கள் தொடர்ந்து மேலும் பேசுகையில் நாவலர் பெருமான் மிகச்சிறந்த பேச்சாளர் மட்டுமல்ல, பாவலராகவும் விளங்கினூர்கள். அத்துடன் இல்லை சுயமரியாதையாகவும் விளங்கியவர் நாவலர் பெருமான் 57 ஆண்டுகள் இலஉலகத்தில் வாழ்ந்து தமிழ் மொழிக்கும், சிவநெறிக்கும் அருந்தொண்டுகள் செய்துள்ளார் நாவலர்பெருமான் எனப் புகழ்மாலை கூறி நாவலர் பெருமானின் வழியை நாட்டில் பரவும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாணவ மன்றத் தலைவர் சென்னை, புலவர் திரு. கோ. வில்வபதி அவர்கள் பாராட்டுரை கூறுகையில் நான் சிறு வயதில் நாவலர் பெருமானின் பாலபாட புத்தகங்களை படிக்கக்கூடிய பாக்கியம் பெற்றதால்தான் நான் இன்று இந்நிலைக்கு வந்துள்ளேன் என்றும், இந்நிலைக்கு நான் வளர்ச்சி அடைவதற்கு நாவலர் பெருமானின் பாலபாட புத்தகங்கள் உரம் போல் இருந்துள்ளன என்றும். ஆகவே, நாவலர்பெருமானின் நன்னெறிகள் மற்ற பகுதிகளிலும் வளர்ச்சி அடையும்படி செய்ய வேண்டும் என்றும்கேட்டுக் கொண்டார்.

சித்தாந்த புலவர் திரு. முருக தம்பிராசா M. O. L. அவர்கள் பாராட்டுரைக்குப் பிறகு அறப்பணிச் செல்வர் டாக்டர் திரு K. அரங்கசாமிபிள்ளை அவர்கள் மாணவ மாணவிகளுக்குப் பல பரிசுகள் வழங்கினூர்கள். பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. க. சுவாமிநாதன் அவர்கள் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

நாவலர் பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. க. சுவாமிநாதன் அவர்களால் தொகுத்து தயாரிக்கப்பட்டுள்ள நாவலர்பெருமானின் வரலாற்றில் தில்லையில் வித்தியாசாலை அமைக்க பொருள் கிட்டவும், மாணவர்களுக்கு உணவுவழங்க வீடுகள்தோறும் சென்று கையேந்தி பிடியரிசி வாங்கிய வரலாறுகளையும் மாணவர்களுக்கு போதித்துள்ளதை, திரு. சதாசிவம்பிள்ளை தவத்திரு நாவலர் வேடங்கள் தாங்கியும், தவத்திரு. நாவலர் பெருமானின் தந்தையார் நாடகங்கள் எழுதிய காலத்தில் கந்தப் பெருமானின் நாடகம் எழுதும்போது நாடகத்தை எழுதி பூர்த்திசெய்யாது விட்டுச்சென்ற பகுதியை பூர்த்தி செய்துள்ள வரலாற்றுக் காட்சியையும் வேடங்கள் தாங்கியும் மக்களின் மனது பரவசமடையும் வண்ணம் நடித்துக் காண்பித்தார்கள்.

நாவலர்பெருமான் மீது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பாடிய பாடலை பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. க. சுவாமிநாதனின் மகள் செல்வி பத்மினி (பள்ளி மாணவி) மக்கள் மனது உருகக் கூடிய வகையில் சிறப்பாக அபிநய நாட்டியம் பக்கவாத்தியங்களுடன் நடித்தனள். மேலும் பல மாணவ மாணவிகளின் கலா நிகழ்ச்சிகள் நாவலர் பெருமானின் கருத்துக்களுடன் நடைபெற்றது 2 மணி நேரத்தையும் நல்ல கருத்துகளில் மனதில் கொண்டு அவ்வப்போது மக்கள் கரகோஷங்கள்செய்து பாராட்டினர்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. M. B 5914

Dr. பொன்னம்பலம் பரமசாமி. காரைநகர் மேற்கு, தற்போது 66, கம்பெல் பிளேஸ், கொழும்பு-10 —பிரதிவழக்காளி

எதிராக

1. குழந்தைவேலு கதிரவேலு நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.
2. மனைவி சிவயோகமும், நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் MB 5914-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனங்களை; முதலிரு ஆதனங்களை 1972-ம் ஆண்டு தை மீ 20-ம் உ (20-1-72) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கமும், மூன்றும் ஆதனத்தை 21-ஆம் திகதி (21-1-72) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கமும் அந்தந்த ஆதனங்களுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 17,937/-ம். 31-7—63 தொடக்கம் 23-1-67 வரைக்கும் ரூபாய் 15,000/—க்கு வருடத்திற்கு 10 வீத வட்டியும் பின் திகதிதொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் வருடத்திற்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 697—44 சதமும், இதில் ரூபாய் 2000/- தவிர்த்து.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுகள் பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை 'நத்திகுண்டு' 1 ஏக்கர் 2 றூட் 16 பேர்ச்சஸ் இதில் மேற்குப் பக்கமாக ½ ஏக்கர் 1 றூட் 8 பேர்ச்சஸ். மேற்கெல்லைக் காணியில் உள்ள வீட்டில் அரைப் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு: இவ்வாதனத்தின் மிகுதிப் பகுதி வடக்கு: விசுவலிங்கம் பெண் மூத்தப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கும் தெற்கும் ரோட்டு. பதிவு: யாழ்ப்பாணம் C. 257/33

2. மேற்படி புங்குடுதீவு மேற்கிறை 'கோவில் வயலும் கோவிலுக்கு தலைமடையும்' நெற்பரப்பு 7½ ரோட்டுக்கு கிழக்குப் பக்கத்திலுள்ளதும் ஆனால் ஆட்சிப்படி நெற்பரப்பு 9கொண்டதுமான இவ்வாதனத்துக்கு எல்லை கிழக்கு: இராசையா கைப்பெண் செல்லமுத்துவினுதனம், வடக்கு அருணாசலம் சபாபதியினுதனம், மேற்கு ரோட்டு தெற்கு நாகமணி ஐயம்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். பதிவு C. 228/27

3. மேற்படி யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு. 'நாவடி இலகாடும் சம்புநாதன் தறையும்' விலப்பரப்பு வரகுச் செய்கை 3, குளிகள் 16, 1/8 (3 Lms- V. C, 16, 1/8 Kls) கல் வீடும், மேற்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் அரைப் பங்கும். எல்லை கிழக்கு செல்லம் துரையப்பாவினுதனம், வடக்கு ரோட்டு, மேற்கு முருகேசு இராமலிங்கத்தினுதனம். தெற்கு முருகேசு இராமனுதனினுதனம், பதிவு C 241/44ம், 287/265 நித்தியகல்யாணி"

அ. சிவானந்தன்

பலாலி ரோட், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

15—12—71 எம். 349 17—12—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 10515

தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா, நல்லூர் —வழக்காளி

எதிராக

செல்லையா நவரத்தினம், நல்லூர் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10515-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972ம் ஆண்டு தை மாதம் 19ம் திகதி (19-1-72) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4723/-ம், 3-1-69 தொடக்கம் 2-8—70 வரைக்கும் ரூபாய் 3700/-க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 431 சதம் 39 இதில் ரூபாய் 1231 சதம் 13 கழிவாக

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் டிவிசனும், நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'மன்மதராயன் வளவு' பர. வில, இலா. 3ம் குளி 1¼ம், கல் வீடு கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு: மூத்துமாரியம்மன் கோவிலின் ஆதனம், வடக்கு தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா மேல் குறிக்கப்பட்ட வழக்காளியின் ஆதனம், மேற்கு: ஒழுங்கையும், அருணாசலம் கைம்பெண் தங்கத்தினுடையதும் பங்காளர்களுடையதும், தியாகராசா பெண் கமலமுடையதும் ஆதனங்கள், தெற்கு சண்முகராசாவுடையதும் கந்தையா பெண் மங்கையர்க்கரசியினுடையதும் ஆதனங்கள் இதடங்கலும் இக்காணிக்கு மேற்கெல்லைப் பக்கமாய் கோவில் ரோட்டுக்குப் போவதற்கு விடுபட்ட ஒழுங்கையின் போய்வரப் பாவிப்புரிமையும் பிற நீங்கலாக பதிவு இல: யாழ்ப்பாண டிஸ்திறிக் காணிக கந்தோர் D. 324/43

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்

107, பெரியதெரு, கொமிஷனரும்,
யாழ்ப்பாணம். விலைமதிப்பாளரும்.

6-12-71 எம். 348 17-12-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 11944

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

1. தம்பையா ஆறுமுகம் 2. பெண் கமலேஸ்வரி

எதிராக —வழக்காளிகள்

புங்குடுதீவு மேற்கு,

1. மருதப்பு செல்லையா மாணிக்கவாசகர்
2. பெண் மங்கையற்கரசி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11944-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972-ம் ஆ. தை மாதம் 19-ம் திகதி (19—1—72) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 11363-87ம் 19—8—70 தொடக்கம் 1—3—71 வரைக்கும் ரூபாய் 10,000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 547-70

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "நாக்கியாக்காட்டுக்குமேற்கு" விலப்பரப்பு (6) ஆறு வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு நாகலிங்கம் சண்முகநாதனுக்கும் பெண் சிவக்கொழுந்துவுக்குமுரிய ஆதனம் வடக்கு கந்தையா சண்ணணாவுக்குமுரிய ஆதனம். மேற்கு ரோட்டு, தெற்கு ஐயாத்துரைக் குருக்கள் கயிலாசநாதக் குருக்களுக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

இ. சு. தர்மரத்தினம்

46, 3-ம் குறுக்குத்தெரு, கொமிஷனரும்.
யாழ்ப்பாணம். விலைமதிப்பாளரும்

எம் 345 17—12—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 10064

இராமலிங்கம் கனகசபாபதி, செட்டித்தெரு. நல்லூர், யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

சரஸ்வதி — சின்னத்தம்பி அருளானந்தம் கைம்பெண் சரஸ்வதி கலட்டி, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். தானுகவும் தனது காலஞ்சென்ற கணவர் சின்னத்தம்பி அருளானந்தத்தின் சட்டபூர்வமான பிரதிநிதி

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10064-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ஆண்டு தை மாதம் 5-ம் திகதி (5-1-72) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3990/-ம் 11-6-68 தொடக்கம் 11—4—69 வரைக்கும் ரூபாய் 3000/—க்கு 12 வீத வட்டியும் அதற்குப்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 280—90 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேழக்கிறை 'பறையாடி' (Parayadi) இதன் நிலப்பரப்பு 2 ஆனால் ஆட்சி உரிமையின்படி விலப்பரப்பு 2¼ம் வீடும் செய்பயிர் வான்பயிர் வகைகளும் தென்மேற்கு எல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு ரோட்டு மேற்கு பொன்னம்பலம் சோதிப்பிள்ளையின் ஆதனம் தெற்கு சொந்த ஒழுங்கைகள், பதிவு D 277/91

வே. கோபாலபிள்ளை

22, ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 22-11-71 எம் 346 17—12—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 8533

The Malcey Life Assurance Co. Ltd, having its office at No 54 Jumma Mosque Lane Jaffna. —வழக்காளி

எதிராக

க. பொன்னையா அல்லது அண்ணாமலை நடுக்குறிச்சி, சண்டிலிப்பாய். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8533 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972-ம் ஆண்டு தை மாதம் மீ 26ம் திகதி (26-1-72) புதன்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 8841/- 19—10—66 தொடக்கம் 20—6—68 வரைக்கும் ரூபாய் 7742/—க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 515—50

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை பீத்ததோட்டம் என்று அழைக்கப்படும் காணி வி. பர. 6ம் செய்பயிர் வான்பயிரும் வீடும் கிணறும் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு வீரேசு வயிரமுத்துவும் பங்காளரும் மேற்கு காத்தி சின்னத்தம்பியும் காத்தி வேலாயுதரும் நவரெட்டினம் மூத்தையாவும். பதிவு இல: E 372/239

நம் 35/2, கோழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்
சண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

எம். 347 17—12

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக; வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 17—12—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்